# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 105/2020 | சாட்சி | வா.சா.1 |
| பெயர் | லெனின்குமார் | நாள் | 23.09.2024 |
| தகப்பனார் பெயர் | அமரப்பன் | | |

**பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை தொடர்ச்சி:–**

28) தாவா சொத்தை வீட்டு மனைகளாக பிரதிவாதிகள் தான் பிரிக்க நடவடிக்கை எடுத்தார்கள் என்றால், என்னுடைய மேற்பார்வையில்தான் அவ்வாறு செய்தார்கள். தற்போது என்னிடம் காட்டப்படும் விளம்பர பிரசுரம் அவ்வாறு தாவா சொத்தை வீட்டு மனைகளாக பிரிக்கும் நோக்கத்தில் ஏற்படுத்தப்பட்டது என்றால், சரிதான். மேற்படி பிரசுரத்தை நான் தான் தயார் செய்தேன். மேற்படி ஆவணம் பிரதிவாதிகள் தரப்பில் **பி.வா.சா.ஆ.1 (Ex.B1)** ஆக வா.சா.1 ன் குறுக்கு விசாரணையில் குறியீடு செய்யப்படுகிறது.

29) மேற்படி பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் நான்கு தொலைபேசி எண்கள் உள்ளது என்றால், சரிதான். மேற்படி நான்கு தொலைபேசி எண்களும் யாருடையது என்றால், அவை பிரதிவாதிகளின் தொலைபேசி எண்கள் ஆகும். நான் சொல்வது போல் என்னுடைய மேற்பார்வையில் மேற்படி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தால், மேற்படி பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் என்னுடைய தொலைபேசி எண்ணும் கொடுக்கப்பட்டிருக்கும் என்றாலும், அவ்வாறு எந்த நடவடிக்கையும் நான் எடுக்காததால்தான் என்னுடைய தொலைபேசி எண் அதில் குறிப்பிடப்படவில்லை என்றால், சரியல்ல. வாடிக்கையாளர்களை முகவர்கள் என்ற அடிப்படையில் பிரதிவாதிகள் தான் நேரடியாக தொடர்பு கொள்வர் என்பதால், அவர்களுடைய தொலைபேசி எண்கள் மட்டும் கொடுக்கப்பட்டுள்ளது.

30) 22.11.2010 ம் தேதியில் பிரதிவாதிகளுடன் ஏற்படுத்திய ஒப்பந்த பத்திரத்தில், 8.19 ஏக்கர் நிலத்தை ரூபாய் 2 கோடியே 46 லட்சத்து, 10 ஆயிரத்து தொள்ளாயிரத்திற்கு விலைபேசி முடிக்கப்பட்டதாக மேற்படி பத்திரத்தில் 2 வது பக்கத்தில்

குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், மேற்படி பத்திரத்தில் அவ்வாறு தான் எழுதப்பட்டுள்ளது. ஆனால், மேற்படி தொகைக்கும் கூடுதலாக விற்பனை செய்தால், மேற்படி கூடுதல் தொகையை பொறுத்து பிரதிவாதிகளுக்கு கமிஷன் வழங்குவதாக எங்களுக்குள் வாய்மொழியாக ஒப்புக்கொள்ளபட்டது.

31) அதற்கு பின் பிரதிவாதிகளுடன் நான் ஏற்படுத்திகொண்ட இரண்டாவது ஒப்பந்த பத்திரத்தில் முதலாவது ஒப்பந்தத்தின்படி விற்பனை செய்யப்பட்டது போக மீதமுள்ள நிலங்களை பிரதிவாதிகள் சொல்லும் நபர்களுக்கு விற்பனை செய்து, அதில் வரும் தொகையை பிரதிவாதிகளும், நானும் சரிபாதியாக பிரித்து கொள்வதாக ஒப்புக்கொள்ளப்பட்டது என்றால், அது குறித்து எனக்கு சரியாக நினைவில்லை. அவ்வாறு குறிப்பிடப்பட்டிருந்தாலும், அது அவர்களுடைய கமிஷன் தொகையாகத்தான் இருக்கும்.

32) கடந்த 2012ம் வருடத்தில் நான் 5.95 ஏக்கர் நிலத்திற்கு விற்பனை தொகையாக நிர்ணயிக்கப்பட்ட 1 கோடியே 78 லட்சத்து 70 ஆயிரத்து தொள்ளாயிரத்தை பிரதிவாதிகளிடமிருந்து முன் பணமாக நான் பெற்றுவிட்டேன் என்றால், சரியல்ல. பிரதிவாதிகள் குறிப்பிட்ட நபர்களுக்கு நான் 1.05 ஏக்கர் நிலத்திற்கு மட்டும் தான் கிரய ஆவணம் எழுதி கொடுத்துள்ளேன் என்றால், பிரதிவாதிகள் கூறிய நபர்களுக்கு மட்டும் 1.04 ஏக்கர் நிலத்திற்கு நான் கிரயம் கொடுத்துள்ளேன். நான் சொல்வது தவறானது என்றாலும், 1.05 ஏக்கர் நிலத்தை மட்டுமே நான் கிரயம் கொடுத்துள்ள நிலையில், மேற்படி 5.95 ஏக்கர் நிலத்திற்குரிய மொத்த கிரய தொகையையும் நான் முன் பணமாக பெற்றுள்ளேன் என்றால், சரியல்ல.

(பிரதிவாதிகள் தரப்பில் கேட்டுக்கொண்டதற்கிணங்க வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)

ஒம்/-திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.